<u>சுருக்கம்</u>

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – 2021–2022 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகளின் எண்ணிக்கை 2,000 லிருந்து 3,000 ஆக உயர்த்தி வழங்க அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.63** **நாள் 16.11.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**பிலவ – ஐப்பசி 30**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (3டி) எண்.03, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை, நாள் 23.06.2021.
2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.அ3/3779/2021, நாள் 17.09.2021.

* * * * *

**ஆணை:**

2021–2022 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையில் இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகளின் எண்ணிக்கையினை 2,000 லிருந்து 3,000 ஆக உயர்த்தி 48 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்ற அறிவிப்பு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2020–2021 ஆம் ஆண்டிற்கான சலவை பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 6 கிலோ எடையுள்ள பித்தளை சலவைப் பெட்டிகளை, வரவு–செலவு திட்டம் 2021–2022–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ரூ.109 இலட்சத்திற்குள், ஒரு சலவைப் பெட்டி ரூ.4870.88 என்ற மதிப்பீட்டில் ஏறத்தாழ 2238 சலவைப் பெட்டிகளை தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திடம் நேரடியாக கொள்முதல் செய்திட

அனுமதி அளித்தும், இத்திட்டத்திற்காக ரூ.109 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், தமிழ்நாட்டில் வாழும் பொருளாதாரத்தில் பின்தங்கிய சலவைத் தொழில் செய்யும் மக்களின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்தும் வகையில் இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998, பிரிவு 16 (f)–ல் தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தை கொள்முதல் முகமையாக (Optional Procurement Agency) நியமிக்கப்பட்டுள்ளது. கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மேற்படி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக 2000 பயனாளிகளுக்கு 6 கிலோ எடையுள்ள பித்தளை தேய்ப்புப் பெட்டிகள், தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் (பூம்புகார்) மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் மூலம் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், இத்திட்டத்தில் பயன்பெற பயனாளிகள் உரிய விண்ணப்பங்களை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் விண்ணப்பித்து காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாகவும், உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் தேய்ப்புப் பெட்டி கோரி பெருமளவில் மனுக்கள் வரப்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஏற்கெனவே, விண்ணப்பித்து காத்திருக்கும் பயனாளிகள் மற்றும் புதியதாக விண்ணப்பிக்கும் பயனாளிகளுக்கும் உடன் பயன்பெறும் வகையில், இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டி வழங்கும் திட்டத்தில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவிப்பு செய்யப்பட்டவாறு, 2021–2022 ஆம் ஆண்டில் 3000 எண்ணிக்கையிலான பித்தளை தேய்ப்புப் பெட்டிகளை பயனாளிகளுக்கு வழங்கிடும் வகையில் தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் (பூம்புகார்) மூலம் 6 கிலோ எடையுள்ள ஒரு பித்தளை தேய்ப்புப் பெட்டியின் விலை ரூ.4,871 (அனைத்து வரிகள் உட்பட) என மொத்தம் 3000 தேய்ப்புப் பெட்டிகளுக்கான மொத்த செலவினத் தொகை ரூ.1,46,13,000–ல் கொள்முதல் செய்து வாங்கி வழங்குவதற்கு அனுமதியும் மற்றும் நிதி ஒப்பளிப்பும் வழங்கி உரிய ஆணை வெளியிடுமாறு அரசினை மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. 2021–2022 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்பான இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகளின் எண்ணிக்கையினை 2,000 லிருந்து 3,000 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அளித்துள்ள கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து, ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் பித்தளை தேய்ப்பு பெட்டிகளின் எண்ணிக்கையினை 3000 ஆக உயர்த்தி, 2021–2022 ஆம் ஆண்டில் ஒரு பித்தளை தேய்ப்பு பெட்டி (6 கிலோ எடை கொண்டது) ரூ.4871 என்ற விலையில் (வரிகள் உட்பட) 3000 எண்ணிக்கையிலான பித்தளை தேய்ப்புப் பெட்டிகளை ரூ.1,46,13,000 (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தாறு இலட்சத்து பதிமூன்றாயிரம் மட்டும்) செலவில் தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் (பூம்புகார்) மூலம் கொள்முதல் செய்து வாங்கி வழங்குவதற்கு அனுமதியும் மற்றும் நிதி ஒப்பளிப்பும் செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் பித்தளை சலவைப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்கு ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்– 102 பொருளாதார முன்னேற்றம் – மாநிலச் செலவினங்கள் – KF – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு இலவச கருவிகள் வழங்குதல் – 320 கருவிகளும் தளவாடங்களும் – 01 – வாங்குதல்"

(த.தொ.கு. 2225–03–102–KF 32001)

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,46,13,000 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2021–2022 ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021–2022–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்க குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு

உரிய கருத்துருவை தவறாது நிதித் (பி, மி.பி (ம) சி.ந/வ.செ.பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. பித்தளை சலவைப் பெட்டிகளை கொள்முதல் செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை அரசுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்குமாறும், மேலும் இச்செலவினத்தை மேற்காணும் திட்டத்திற்கு மட்டும் செலவிட வேண்டும் என்றும், செலவினம் போக மீதம் இருப்பின், அத்தொகை அரசிற்கு உடனடியாக சரண் செய்யப்பட வேண்டும் என்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், பயனாளிகளை இத்திட்டத்திற்கான தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்திடவும், ஒரு முறை மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் வகையிலும் தேர்வு செய்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.49299/நிதி(பி, மிபி (ம) சி.ந)/2021, நாள் 13.11.2021–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 812 (எண்ணூற்று பன்னிரெண்டு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நல ஆணையர், சென்னை –5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–18, (பெயரில்).
மாநில கணக்காயர், (தணிக்கை) சென்னை–18.
மாநில கணக்காயர், (தணிக்கை) சென்னை–18. (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை– 5.

<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.

நிதி (பி, மிபி/வ.செ.பொது–I/II/வ.வ.I) துறை, சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மை செயலாளரின்
முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

16.11.2021
**பிரிவு அலுவலர்**
16/11/2021